## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

# ... "நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களில் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினலே உன்னிடத்தில் வருகிறேன்"

1 சாமுவேல் 17:45

செய்தி மலர்
2022
ஜுன்

இதழ் : 02
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



இறைமகனாம் இயேசுவின் நாமத்தில் சபையின் குடும்பங்கள், சகோதர, சகோதரிகள், வாலிபர்கள், சிறுபிள்ளைகள் யாவரையும் வாழ்த்துகிறேன். இந்த வருடத்தில் ஐந்து மாதங்களை சுகத்தோடும், பெலத்தோடும், சகல ஆசிகளோடும் கடந்து வர செய்த தேவாதி தேவனுக்கு சபையோர் அனைவருக்கும் நன்றி சொல்லி, அவர் நாமத்தை உயர்த்துவோமாக. நமது சபையின் சிறுபிள்ளைகள் அநேகரும் தேர்வுகளை முடித்து, விடுமுறை நாட்களில் பிரவேசிக்கின்றனர். அநேகர் இந்திய தேசத்திற்கும் பிரயாணம் செய்கின்றனர். ஒவ்வொரு சிறுபிள்ளைகளையும் சந்தோஷத்தோடும் நடத்துவார். தேவனுடைய பாதுகாப்பும், அரவணைக்கும் கரங்களும் காக்கும் படியாய் நம்முடைய குழைந்தைகளுக்காக ஜெபிப்போம்.

நாம் எவ்வளவு காலம் இந்த பூமியில் வாழ்கின்றோமோ, அவ்வளவு காலமும் எந்த வல்லமையும், எந்த அந்தகார சக்திகளும் எதிரிகளும் நம்மை எதிர்த்து நிற்காமல் காக்கப்படுவோம். அது எப்பொழுது சாத்தியம் என்றால், நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும்போதும், தேவ பாதுகாப்பு நம்மை சூழ்ந்து இருக்கின்றபோதும், ஒருவனும் எதிர்தது நிற்ககூடாத வாக்கினாலும், வல்லமையினாலும் ஆண்டவர் நம்மை நிரப்புவார். “உயிரோடு இருக்கும் நாளெல்லாம், ஒருவனும் உங்களை எதிர்த்து நிற்பதில்லை”.

ஒரு யுத்த வீரனுக்கு ஜீவன், சுகம், பெலன், தைரியம், நம்பிக்கை இவைகள் அனைத்துடனும் மிக முக்கியம் அவனுடைய “ஆயுதம்”. ஆயுதமின்றி ஒருவனும் யுத்தகளத்திற்க்கு செல்லமாட்டான். தாவீது பெலிஸ்தனை வீழ்த்த முற்படும் போது, அவனிடத்தில் இருந்தது கவனும், கூழாங்கற்களும், அதனிலும் மேலாய் தேவ கிருபை அவனை சூழ்ந்திருந்தது.

**“கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகின்றேன்” I சாமுவேல் 17:45**

தேவாதி தேவன் நம்மோடு கொண்டிருப்பதே நமக்கு பெரிய ஆயுதம்.கர்த்தரின் கிருபையினாலே, அவருடைய சமூகத்தில் நம்முடைய "ஆயுதங்கள்" அநேகம் உண்டு

## முதலாவது "ஜெபம்":

நாம் ஜெபிக்க வேண்டும் சபைக்காக, ஆத்துமாக்களுக்காக ஜெபிக்க வேண்டும். சபைக்காக, ஆத்துமாக்களுக்காக ஜெபிக்க மன்றாட்டு வீரர்களை எழுப்பவேண்டும் . எந்த ஒரு சபைக்காக பாரத்தோடு ஜெபிக்கின்ற தேவ ஊழியர் , மற்றும் மூப்பர்கள் இருக்கிறார்களோ அந்த சபை பாக்கியமுள்ளது. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவருக்கொருவர் செய்கிற ஊக்கமான ஜெபம் மகா பெலனும், வல்லமையும் உள்ளதாய் இருக்கின்றது.

நாம் கண்ணீரோடு ஜெபிப்பவர்களானால், நாம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் நம்மை யாரும், எந்த அந்தகார சக்தியும் எதிர்த்து நிற்காது.

## இரண்டாவது "வேத வசனங்கள்":

யோவான் 6:63ல் சொல்லிய படி வேத வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் அதுதான். இந்த பட்டயம் நம்மோடு இருக்கம் போது நாம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் நம்மை எதிர்த்து நிற்க முடியாது. பிரசங்கிக்கும் போதும், ஜெபிக்கும் போது வேத வசனங்களை மேற் கோள் காட்டி ஜெபிக்கும் போது அது சாத்தானை சம்மட்டியாய் அடித்து வீழ்த்தும்.

"உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்" (1யோவான் 4:4).

அப்பொழுதுதானே (அவர் நம்மோடு இருக்கும்போது) " உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்" (ஏசாயா 54:17).

## மூன்றாவதாக துதியின் சத்தம்:

நம்முடைய பிரச்சனைகள், போரட்டங்கள், கட்டுகளை பார்க்க வேண்டாம். துதி எடுத்தால் சாத்தான் ஓடுவான் . . . என்ன ஒரு அற்புதமான வல்லமை மிக்க பாடல். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோதரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" என்று சொல்லிய தாவீதைப்போல நாமும் சொல்லவோம்.

பவுலும், சீலாவும் தாங்கள் பட்ட காயங்களோ, அவமானங்களையோ பார்க்கவில்லை, சிறைச்சாலையில் இருப்பதையும் நினைக்கவில்லை, அவர்களின் உள்ளம் தேவ அன்பினால் நிறப்பப்பட்டு, துதித்து ஆர்பரித்தபோது சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசைந்து, கதவுகள் திறவுண்டது,

கட்டுகள் கழன்று போயிற்று. நாமும் நம்முடைய கட்டுகள் அவிழ்க்கப்பட துதியின் ஆயுதத்தை எடுப்போம்.

## நான்காவது கர்த்தருடைய நாமம்:

அலங்கார வாசலிலே அலங்கோல முடவனவன் நடந்தானே இயேசு நாமத்தில் . . . மிகவும் கருத்துள்ள பாடல், அதிசயம் செய்ய வைத்தது பேதுரு சொன்ன "இயேசுவின் நாமத்தினாலே எழுந்து நட" அந்த வல்லமையுள்ள நாமம் தானே?

என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள், என் நாமத்தினாலே என்று வாக்குரைத்தவர் வாக்குமாறாதவராகவே இருக்கிறார்.

நாம் எதை செய்தாலும் கர்த்தருடைய நாமத்தினாலே செய்வோம். வருகின்ற மாதத்தில் நடைப்பெறப்போகின்ற ஒவ்வொரு ஆராதனைகள், ஜெபக் கூட்டங்களிலும் கர்த்தர் நாமம் மகிமைப்படவும், சபையில் பிரயானம் செய்கிறவர்களின் ஆசீர்வாதத்திற்காகவும், தேவையோடு இருப்பவர்களின் தேவைகள் சந்திக்கப்படவும், விடுமுறைக்கு சென்றவர்கள் நம் அனைவரோடும் இருந்து ஆசீர்வதித்து, காத்து நடத்துவதாக, ஆமென்.

சபை ஊழியர்,
சகோ. ஜெயசேகர்.

**ஆண்டவரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.**

**"அவர் என்னை நோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்" . . . (சங் 91:15)**

**ஆம் தேவனுடைய பிள்ளைகளே நாம் நம் கர்த்தரை நோக்கி கூப்பிடும் போது மறு உத்தரவுக்காக காத்திருக்கிறோமா இல்லையே. கடமைக்காக தேவனுடைய சமூகத்தில் கடந்து சென்று ஜெபித்துவிட்டு நம்முடைய காரியங்களுக்காக செல்கிறோம். ஆனால் ஒரு இக்கட்டான சூழ்நிலை வரும் போது தேவ சமுகத்தில் விடுதலைக்காக போராடுகிறவர்களாய் காணப்படுகிறோம்.**

**ஆசாரியர்களான மோசேயும், ஆரோனும், அவருடைய நாமத்ழத பற்றி கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். அவர் அவர்களுக்கு மறு உத்தரவு அருளினார் (சங் 99:6) என்று வேதம் சொல்கிறது. அதே போல தங்கள் தங்கள் சூழ்நிலைகளில் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு ஜெயத்தை பெற்றுக்கொண்டவர்களை குறித்து கீழ்வரும் பகுதிகளில் பார்க்கலாம்.**

## 1.எசேக்கியா ராஜா :

**அந்நாட்களில் எசேக்கிய வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.**
**இன்றைய நாட்களிலும் நம்மையும் இப்படி தான் பிசாசானவன் வேதனைப்படுத்தி கொண்டு இருக்கலாம். நாம் செய்ய வேண்டியது என்ன எசேக்கியாவை போல ஆண்டவருடைய சமுகத்தில் எழுந்து வர வேண்டும்.**

**ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணி மிகவும் அழுகிறதை பார்க்கிறோம். 2 இராஜாக்கள் 20:3**

வசனம் சொல்கிறது "இனி நீ அழுதுகொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்." (எசா 30:19)என்று.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே அவர் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார். (சங் 147:9)
இங்கே பார்க்கும் போது எசேக்கியா ராஜா ஜெபம் பண்ணி ஆண்டவருடைய சமுகத்தில் மிகவும் அழுதான் என்று.

எசேக்கியா மரித்து போவான் இனி பிழைக்க மாட்டான் என்று கர்த்தரால் உரைக்கப்பட்டதை தெரிவித்து கொண்டு புறப்பட்ட ஏசாயா பாதி முற்றம் கூட தாண்டவில்லை. அதற்குள்ளாகவே தேவன் எசேக்கியாவின் ஜெபத்திற்கு மறு உத்தரவு தீர்க்கதரியாகிய ஏசாயா மூலம் அருளினதை பார்க்கிறோம்.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே "நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியார்" (சங் 51:17).
நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்து சென்றாலும் தேவனிடத்தில் காரியத்தை தெரியப்படுத்தி விடுதலையை பெற்றுக் கொள்வோம். இந்த எசேக்கியா ராஜாவை போல உன் விண்ணப்பத்தை கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன். (ஏசா 38:5) என்று சொல்லுவதை பார்க்கிறோம்.
ஆம் கர்த்தருக்கு பிரியமானவர்களே நம்முடைய தேவன் நம் கூப்பிடுதலுக்கு மறு உத்தரவு அருளுகிற தேவன் .

## 2.தாவீது:

1 சாமு 30–ம் அதிகாரம் 1–19 வரை தியானிக்கும் போது அமலேக்கியர்கள் சிக்லாக்கின் மேல் விழுந்து அதை கொள்ளையடித்து அங்குள்ள சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோரையும் சிறைபிடித்து கொண்டு போனார்கள் என்று தாவீது கேள்விப்பட்ட போது.

"தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்கு பெலனில்லாமல் போகுமட்டும் அழுதார்கள் (1சாமு 30:4) என்று பார்க்கிறோம்.
"தாவீது கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின்தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா என்று கேட்டான். அதற்கு

அவர்: அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார்." (1 சாமு 30:8).

நாமும் இன்று எல்லாவற்றையும் இழந்து எல்லாருக்கும் முன்பாகவும் தலைகுனிந்து வெட்கப்பட்டு நிற்கலாம். நாம் நம் ஆத்துமாவை எப்படி பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் கர்த்தருடைய சமுகத்தில் போய் செல்ல வேண்டும் தேவனை நோக்கி கூப்பிட வேண்டும். அப்பொழுது மறு உத்தரவு அருளுவார்.

"நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்;" (சங் 138:3). என்ற வசனத்தின் படி தாவீது தேவனுடைய சமுகத்தில் விசாரிக்கும் போது தேவன் மறு உத்தரவு அருளுகிறதை பார்க்கிறோம். அது மாத்திரமல்ல ஆத்துமாவிலே பெலன் கொடுத்தார் என்றும் பார்க்கிறோம்.

" . . . நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார்." (1 சாமு 30:8).

" கர்த்தரின் வார்த்தையின் படியே தாவீது ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான்." (1 சாமு 30:19) பார்க்கிறோம்.

அன்பு தேவனுடைய பிள்ளைகளே இன்றைக்கு நீங்கள் எதை இழந்து நிற்கிறீர்கள் எதில் வெட்கம், அவமானம் அடைந்தீர்கள் தேவனை பற்றி பிடியுங்கள். அவர் நமக்கு எல்லா கட்டுகளிலுமிருந்து விடுதலை தருவார்.

அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார். (சங் 99:6) என்று வேதம் சொல்கிறது.
அவருடைய அதிசயமான நாமத்தை பற்றிக்கொண்டு தாவீது கூப்பிட்ட போது மறு உத்தரவு அருளி அவனுடைய காரியத்தில் ஜெயத்தை கட்டளையிட்ட தேவன் இழந்து போன எல்லாவற்றையும் திருப்பி

கொடுத்த தேவன் நமக்கு பதில் தருவார். விடுதலையை கட்டளையிடுவார்.

## 3. நூற்றுக்கு அதிபதி:

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் சுற்றி திரிந்த நாட்களில் அற்புதங்களை செய்கிறவராகவும், கட்டுண்ட மக்களை விடுதலை செய்கிறவராகவும் காணப்பட்டார்.

மத்தேயு 8-ம் அதிகாரத்தில் 5 முதல் 13-ம் வசனங்களை தியானிக்கும் போது அங்கே இயேசு கிறிஸ்து கப்பர்நகூமில் பிரவேசித்த போது நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து என் வீட்டு வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டி கொண்டான். அதற்கு இயேசு நான் வந்து அலனை குணமாக்குவேன் என்றார்.

நூற்றுக்கு அதிபதி பிரதியுத்திரமாக ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க பாத்திரவான் அல்ல. ஒரு வார்த்தை மாத்திரம் செல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான் (மத் 8:8).

அவன் வேண்டி கொண்ட வார்த்தையின்படியே அவனுடைய விசுவாசத்தை பார்த்து இயேசு கிறிஸ்து அவனுக்கு மறுஉத்தரவு அருளினதை காணலாம்.

இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார்.
அந்த நாளிகையில் தானே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். (மத் 8:13) என்று பார்க்கிறோம்.

ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று தான். நம்மிடத்தில் உள்ள அவரை பற்றிய விசுவாசம் உறுதியானதாக காணப்பட்டால் நிச்சயம் நாம் கேட்கிற காரியத்தில் மறுஉத்தரவு அருளுவார்.

அவர் நம்முடைய தகப்பன். உலகப்பிரகாரமான தகப்பனை நாம் கூப்பிடும் போது நமக்கு மறுஉத்தரவு அருளுகிறது போல நமது ஆவிக்குரிய தகப்பனாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி கூப்பிடும் போது "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் நமக்கு இரங்குவார் (சங் 103:13)".

*எலியாவின் ஜெபத்துக்கு அக்கினியினால் பதிலளித்த தேவன் (1 இரா 18:21–39)

*யாக்கோபு போராடி ஜெபித்த ஜெபத்திற்கு மறுஉத்தரவு அருளி அவனை ஆசிவதித்த தேவன் (ஆதி 32:28)

*எசேக்கியாவின் அழுகையின் ஜெபத்திற்கு மறுஉத்தரவு அளித்து அவனை விடுதலை செய்த தேவன் (ஏசா 38:5).

*நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தை கண்டு அவனுக்கு மறுஉத்தரவு அருளி அவன் வேலைக்காரானை விடுவித்த தேவன் (மத் 8:8,13).

இன்றைக்கும் நம்முடைய சூழ்நிலைகளை மாற்ற வல்லவராய் இருக்கிறார். நாம் செய்ய வேண்டியது அவர் நமக்கு கொடுத்த அதிகாரத்தின் படி அப்பா பிதாவே என்று கூப்பிடும் போது தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவது போல் நம்முடைய எல்லா காரியங்களிலும் இரங்கி விடுவிக்க வல்லவராயிக்கிறார். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தரின் பணியில்,
சகோ. M.கிறிஸ்டோபர்

## எல்லாம் மாயை

சிந்தித்துப் பார்க்கின்றேன் சீர் கெட்ட உலகத்தை
மனிதர்கள் எல்லோரும் மாயவித்தை காரர்களே
மாறிவரும் உலகத்திலே மாறாத மனிதர் எங்கே
மாயைகள் பல கண்டு மயங்கிய மனிதர் பலர் உண்டு
பொல்லாத சிற்றின்பம் பூமியில் உள்ளனவே
அத்தனையும் மறைந்து விடும் ஆசைகள் கொள்ளாதே
சிரித்துப் பழகுபவர் சீக்கிரமாய் விலகுவார்கள்
சிலுவையை எடுத்துக்கொள் தேவ சித்தமதை செய்து விடு
அழகும், ஆடம்பரமும் கல்வாரி அன்பை மிஞ்சிடுமோ
பணமும், பொருளும் பரிசுத்த வாழ்வை தந்திடுமோ
உலகத்தின் பின்னால் செல்லாதே மனமே
சர்வத்திற்க்கும் நியாயாதிபதி சகலத்தையும் செய்வார் மறவாதே . . .
"எல்லாம் மாயை புரிந்து கொள் என் மனமே"

சகோதரி வனித்தா

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..
... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜான் கெட்சன்
செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வன். வெங்கடேஷ் ராஜன்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோ. ராபின்ராஜ்
செல்வி. ஆஸ்லின் கெசியா
செல்வி. சாரா மொர்சிலின் மேஷாக்
செல்வன். மெல்வின் ஸ்டீவ் மேஷாக்
சகோ. ஜெஸ்டின்
சகோ. ஜஸ்டிஸ் விஜல் குமார்
செல்வன். கிங்ஸ்டன் ஐசக்
செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
செல்வன். ரயான் சதீஷ்குமார்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
செல்வன். ஜுயன் லின்சன் ஜெபசிங்
சகோ.பிபின் ரிச்சர்ட்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்
செல்வி.ஹதாஸ லினு ஜினு
செல்வன். ஜெய்சன் பாலகிருஷ்ணன்
சகோ. கிரன் குமார்
செல்வி. பிரவீனா லாசர்

சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
செல்வன். ஸொர்வின் சிவகுமார்
சகோ. ஜோஷ்வா டோனி
சகோ. ஆன்டனி பாபு
சகோதரி. சோபியா மேஷாக்
சகோ. பக்தராஜ்
செல்வன். ஜோஷ்வா ஜான்ஸன்
சகோதரி. ஷீபா பிரசாத்
செல்வன். ரொனால்டோ ஜோசப்
செல்வி.பியூலா கலியமூர்த்தி
சகோதரி. வனிதா .K
சகோதரி.இசைவாணி வில்கின்ஸன்
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
சகோதரி. ஆக்நஸ் எலிசபெத் யோவான்
செல்வி. எபிஷா ஜானி எபிநேசர்
செல்வன். நிபாடின் ஹரீஷ்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
சகோதரி.பிரிமிதா ரூத் பிருகிதா
செல்வன். ஜாண் ஜெரேமியா மில்லர்
சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீட்டர்
செல்வி. ஜெனி டேனியல்
செல்வன். கவின் அந்தோனி
சகோ.கிறிஸ்டோபர் . M
சகோ. ஜஸ்டின்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு. வினோத்குமார்
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி & திரு. M. யேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட் ஜெயகுமார்

திருமதி & திரு. ஜெரேமியா
திருமதி & திரு. ஐசக்துரை
திருமதி & திரு. மகேஷ் ராஜ்
திருமதி & திரு. ராஜ்

ll

# 2022 ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
| --- | --- | --- |
| 05/06/2022 | சகோ.பிராங்கிளின் | சகோ. சுகுமார் |
| 12/06/2022 | சகோ.வேலுராமர் | சகோ.கிறிஸ்டோபர் . M |
| 19/06/2022 | சகோ.ஆண்டனி | சகோ.ஸ்டாலின் |
| 26/06/2022 | சகோ.தாமஸ் | சகோ.பிராங்கிளின் (MOH) |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
| --- | --- | --- |
| 03/06/2022 | சகோ.ஸ்டாலின் | சகோ.கிறிஸ்டோபர். J |
| 10/06/2022 | சகோ.வில்சன் | சகோ.ஏசுரெத்தினம் |
| 17/06/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/06/2022 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.ஜெகநாதன் |

09/06/2022 அன்று **முழு இரவு ஜெபம்**

இடம் – அஹமதி பவுல் ஆலயம்

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

24/06/2022 அன்று **வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:00 முதல் 8:00 மணி வரை

(வேத வினா பகுதி—ஆதியாகமம் )

25/06/2022 அன்று **சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை

கூடுகையை பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் – சகோதரி. ஷீபா அருண் இம்மானுவேல்

(வேத வினா பகுதி—ஏசாயா)

# 2022 ஜுன் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.யோபுவை அவன் சிநேகிதர்கள் எத்தனை முறை நிந்தித்தார்கள்?

2.மழையை பட்சிப்பது எது?

3.கள்ளன் என்று துரத்த பட்டவர்கள் யார்?

4.எது முத்திரை போட்டிருப்பதாக யோபு கூறினார்?

5.யாருடைய கண்கள் பூத்து போகும்?

6. சர்ப்ப நட்ச்சத்திரத்தை உருவாக்கினது யார்?

7. முதியோர் பேசட்டும் என்று காத்திருந்தவன் பெயர் என்ன?

8.தன் குஞ்சுகளை அடைகாக்காத பறவை எது?

9.எது ஆக்கினையை வரவழைக்கும்?

10.கடந்து போகமுடியாத எல்லையை யார் யாருக்கு ஏற்படுத்தினார்கள்?

11.யோபு யாரை சந்திக்க வேண்டும் என்று ஆசைபடுகிறார்?

12.நியாயாதிபதிகள் விசாரிக்கபடும் அக்கிரமம் எது? இருப்பிடம் மட்டும் தருக

13.நான் திரும்ப வராத வழியே போவேன். சொன்னது யார்?

14.யோபுவுக்கு பாகையும் சால்வையுமாய் இருந்தது எது?

15.நிந்திக்கபட்டதை குறித்து எந்த நண்பர் பேசினார்?

**விடைகளை வருகின்ற 20-06-2022க்குள் (WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் யோபு 14-42 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2022 –மே மாத வேத வினாவுக்கு விடை

1.கோபம் (யோபு 5:3)

2.ஏழு விருந்து வைத்தான் (எஸ்தர் 1:4,5 )

3.பென்யமீன் (எஸ்தர் 2:5 )

4.சொப்பனங்கள் (யோபு 7:14)

5.உம்முடைய கையை என்னைவிட்டுத் தூரப்படுத்தும்; உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப் பண்ணாதிருப்பதாக. (யோபு 15:21)

6.ஆமானின் மனைவி சிரேஷீம். அவனுடைய சிநேகிதர் எல்லாரும். (எஸ்தர் 15:14)

7.சர்வாங்க தகனபலிகள் செலுத்தினான். (யோபு 1:5)

8.கிழச்சிங்கம் (யோபு 4:11)

9.ஆதார் மாதத்தின் பதினாலாம் பதினைத்தாம் தேதிகளில். (எஸ்தர் 9:21)

10.பதினாயிரம் தாலந்து வெள்ளி. (எஸ்தர் 3:9)

11.ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். (யோபு 5:9)

12.தண்டிக்கிற, பாக்கியவான். (யோபு 5:17)

13.தேவனுடைய அந்தரங்க ஞானமும், சர்வ வல்லவருடைய சம்பூரணமும். (யோபு 11:7,8)

14.ஆமான் (எஸ்தர் 3:10)

15. யோபுவின் நண்பர்கள். (யோபு 13:4)

## 2022 – மே மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.வனித்தா
Sis.ஷீபா அருண் இம்மானுவேல்
Sis.பியூலா ஜெகன்நாதன்
Sis.ஜெஸ்லெட்
Sis.விஜயா ஆண்டனி
Sis.ஜீனா சதிஷ்குமார்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Bro.பால்ராஜ்

## வாலிபர் பகுதி

இயேசு கிறிஸ்து மூலமாய் புறஜாதிகளான நம்மை ஆபிரகாமின் சந்ததியாகும்படி முன் குறித்து நம்மை இரட்சித்த தேவனுக்கு மகிமையுண்டாவதாக!

கெட்ட குமாரனைப்போல பாவ வாழ்க்கையில் வாழ்ந்து வந்த நம்மை தேடி வந்து தம் இரத்தத்தினால் கழுவி இரட்சித்தவர் நம் தேவன் கெட்ட குமாரனோவென்றால் தகப்பனை தேடி வந்தான். இயேசுவோ நம்மை தேடி வந்த அன்பு தகப்பன்.
கெட்ட குமாரனுடைய தகப்பன் தன் குமாரனுக்கு உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி, மோதிரத்தையும் பாதரட்சைகளையும் போட்டுவித்தார்.

### 1.உயர்ந்த வஸ்திரம்:

நாம் மனம்திரும்பும் போது நம் தேவன் இரட்சிப்பின் வஸ்திரத்தையும் நீதியின் சால்வையையும் நமக்கு உடுத்துபவர்.
பிரதான ஆசாரியனான யோசுவா கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றபோது கர்த்தர் அவன்மேல் இருந்த அழுக்கு வஸ்திரங்களை களைந்துபோட்டு சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தார். (சகரியா 3:3,4).

நம்முடைய நீதி அழுக்கான கந்தையைப் போன்றது. அவரே இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தி இயேசு கிறிஸ்து மூலமாக நீதிமான்களாக மாற்றுபவர். நீதிமான்களாக்கப்பட்டதினால் தைரியமாக கிருபாசனத்தண்டையிலே நம்மால் சேர முடிகின்றது.
மேலும் வஸ்திரம் கொடுப்பது தகப்பனின் அன்பை குறிக்கும். இஸ்ரவேல் தன்குமாரர் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசிக்கும் அவனுக்கு பலவருணமான அங்கியைச் செய்வித்தான் (ஆதி 37:3).

எனவே நாமும் சொல்லுவோம், "கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன். என் தேவனுக்கு என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; . . . அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் . . ." (ஏசா 61:10).

## 2.மோதிரம்:

மேதிரமானது அதிகாரத்தை குறிக்கும் . "அப்பொழுது ராஜா தன் கையிலிருக்கிற தன் மோதிரத்தைக் கழற்றி, அதை ஆகாகியனான அம்மெதாத்தாவின் குமாரனும் யூதரின் சத்துருவுமாகிய ஆமானிடத்தில் கொடுத்து, ஆமானை நோக்கி: அந்த வெள்ளியை நீ வைத்துக்கொள்; அந்த ஜனத்துக்கு உன் இஷ்டப்படி செய்யலாம் என்றான்.முதலாம் மாதம் பதின்மூன்றாந்தேதியிலே, ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள்; ஆமான் கற்பித்தபடியெல்லாம் ராஜாவின் தேசாதிபதிகளுக்கும், ஒவ்வொரு நாட்டின்மேல் வைக்கப்பட்டிருந்த துரைகளுக்கும், ஒவ்வொரு ஜனத்தின் பிரபுக்களுக்கும், அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும் எழுதப்பட்டது; ராஜாவாகிய அகாஸ்வேருவின் பேரால் அது எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டது." (எஸ்தர் 3:10-12).

"பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து,தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்;" (ஆதி 41:41-43).

நம் தேவன் இரட்சிக்கப்பட்ட நமக்கு தரும் அதிகாரம்- "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."
(லூக் 10:19).

## 3.பாதரட்சைகள்:

பாதரட்சை ஆயத்தத்தைக் குறிக்கும் என்னும் பாதரட்சையைக் கால்களில் தொடுத்தவர்களாய் (எபே 6:15).
தன் சுயநலத்திற்காக ஓடின கெட்ட குமாரனின் பாதங்கள் தகப்பனின் அன்பால் கொடுக்கப்பட்ட புதிய பாதரட்சைகளை அணிந்தன. நாமும்

நம் நலத்தை மற்றும் எண்ணாமல் நற்செய்தியை சொல்லும் நபராக இருக்க தேவன் விரும்புகிறார்.

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். (லூக் 12:47)

இரட்சிக்கப்பட்ட நம் ஒவ்வொருவருக்கும் உண்டு இரட்சிப்பின் வஸ்திரம், அதிகாரமாகிய மோதிரம், ஆயத்தமென்னும் பாதரட்சை.

"இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவோம்?" (எபி 2:4).

## வாலிபம் இயேசுவுக்கே

### சகோதரிகள் பகுதி

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன் இந்த வாய்பை தந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

பிரச்சனையும், தீர்வுகளும்

2 கொரி 4:17 மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைள நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

நமக்கு ஒரு சோதனை, உபத்திரவம், நிந்தைகள் வரும் போது அநேகர் ஒரு மாற்று வழியை தான் தேடுகிறார்கள், வேதத்தில் பார்க்கிறோம்.

**1.சாராள்:**

ஆதி 16:2 சாராள் ஆபிராமை நோக்கி: நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்.

தேவன் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் கொடுத்தார் உன் சந்ததியை ஆசீர்வதிப்பேன், என்று ஆபிரகாமின் மனைவி சாராள் அப்படியானால் தேவன் சாராளுக்கு குழந்தை பாக்கியத்தை கொடுப்பார் என்று விசுவாசிக்க சாராள் மறந்தவளாய், தான் கிழவி வயது சென்றவள் என்று தன்னை குறித்து தான் சிந்தித்தாள். தேவனின் வார்த்தைகளை மறந்து விட்டாள்.

நாம் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும் தேவன் வாக்கு மாறாதவர், என்று.

சாராள் நினைக்கிறாள் ஆகாரை கொடுத்தாள் அவள் மூலமாக பிள்ளை கிடைக்கும், நமக்கும் நிந்தையிருக்காது, தேவனின் வாக்குதத்தமும் நிறைவேறும் என்று தவறான தீர்வை காட்டுகிறாள்.
நாம் உதவி செய்து தேவன் அவரது வாக்குதத்தத்தை நிறைவேற்ற அவசியம் இல்லை, அவர் சர்வ வல்லமை உள்ளவர், கல்லுகளில் இருந்து பிள்ளைகளை உண்டு பன்ன வல்லவர்.

## 2.ரெபெக்காள்:

ஆதி 25:21 "மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்."
ரெபெக்காள் தன் அத்தை சாராளைப் போல மாற்று வழியை தேடவில்லை, மாத்திரம் அல்லது ஈசாக்கு தன மனைவிக்காக ஜெபித்தாள்.

## 3. ராகேல்:

ஆதி 30:1 "ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு, தன் சகோதரியின்மேல் பொறாமைகொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளைகொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள்."
தேவ பிள்ளைகளுக்கு தற்கொலையின் ஆவி வரவே கூடாது . ஏனென்றால் நமக்கு கர்த்தர் அவரது ஜீவனையே கொடுத்திருக்கிறார் நாம் அவருக்காக வாழ்வதற்காக.
யோவான் 1: 12
"அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டு விடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்;

என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்பதை நான் அறிவேன் என்றான்."
அவனை கடலில் தூக்கி போட்டார்கள்.

## 4.அன்னாள்:

1சாமு 1:7 "அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்தில், அவன் வருஷந்தோறும் அந்தப்பிரகாரமாய்ச் செய்வான்; இவள் அவளை மனமடிவாக்குவாள்; அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள்."பிற்பாடு ஜெபித்து சாமுவேலைப் பெற்றுக் கொண்டாள்.

பாருங்கள் ஒரே பிரச்சனை குழந்தை இல்லை ஆனால் ஒவ்வொருவரும் கற்றுதரும் வழிகள் வித்தியாசமானவைகள்.
(1)சாராள் – மறுமனையாட்டியை தேடுகிறாள்
(2)ரெபெக்காள்– ஈசாக்கு ஜெபித்தார்
(3)ராகேல் – தற்கொலையின் ஆவி
(4)அன்னாள் – அழுவது, ஜெபிப்பது

ஆனால் வேதத்தில் இன்னொருவரை நாம் பார்க்கிறோம் அவளுக்கும் இதே பிரச்சனை குழந்தை இல்லாததுதான்.

## மனோவாவின் மனைவி:

நியாயாதி 13:3
"கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்."

மனோவாவின் மனைவிக்கு குழந்தை இல்லை. அவள் அழுதாள் என்றோ மறுமனையாட்டியை தேடினாள் என்றோ, தற்கொலை செய்ய போகிறேன் என்றோ சொல்லவில்லை மாறாக அவள் அவள் வேளையை சரியாக செய்து கொண்டேவருகிறாள். தேவ தூதன் அவளை தேடி வருகிறான். ஒன்று அல்ல இரண்டு முறை பரலோகம் தேடி வருகிறது.
யோபு சொல்கிறார் "எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்; இப்படிப்பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு." யோபு 23:14.

நாமும் கர்த்தர் நமக்கு நியமித்த காரியங்களை சரியாக செய்வோம் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தரின் பணியில்,
சகோதரி விஜயா ஆண்டனி

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில





















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only